அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி)

கோயம்புத்தூர் - 18.

தமிழ்த்துறை

# தமிழ் இலக்கிய வரலாறு

(18BTA34C)

முனைவர் கோ. குருசாமி

உதவிப்பேராசிரியர்

கைபேசி: 9003780832

# தமிழ் இலக்கிய வரலாறு - (18 BTA 34C)

பாட நோக்கம்:- தமிழ் இலக்கியங்களின் தோற்றம், வளர்ச்சி, தமிழர்களின் பண்பாடு, நாகரிகம், மக்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றை அறிந்து கொள்ளச் செய்தல்.

பாடநூல்:- இலக்கிய வரலாறு - கு. பஞ்சநாயகம்

---

அலகு-1 — 1. செவ்வியல் இலக்கியம்
2. அற இலக்கியம்

அலகு-2 — 1. காப்பியங்கள்
2. தமிழ் இலக்கியம் சமயங்கள்
3. பொது இலக்கியங்களைத் தரப்படுத்தும் முயற்சி

அலகு-3 — 1. சிற்றிலக்கிய விளக்கம்
2. ஐரோப்பியர் வருகையும், தமிழ் இலக்கியமும்

அலகு-4 — 1. இயக்கங்களும் இலக்கியங்களும்
2. நாடக இலக்கியம்

அலகு-5 — 1. ஊடகங்களும் இலக்கியங்களும்
2. உலக நாடுகளில் தமிழ் இலக்கியம்

---

## அலகு-1. செவ்வியல் இலக்கியம்

தமிழில் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கியங்கள் பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும். தமிழர்களின் வாழ்விலிருந்து பிறந்த இலக்கியங்களின் தொகுப்பு. நீண்ட பாடல் அடிகளைக் கொண்டது பத்துப்பாட்டு. திரு, பொருந, சிறு, பெரும், மலை, முல்லை, குறிஞ்சிப்பாட்டு, நெடு, பட்டி, மதுரைக்காஞ்சி என்பன. குறைந்த அடிகளைக் கொண்ட பாடல் தொகுப்பு எட்டுத்தொகை. அவை - நற், குறு, ஐங், கலி, அக, புற, பதி, பரிபாடல் என்பன.

**அக இலக்கியம்**:- பத்துப்பாட்டில் முல், குறி, பட்டி, நெடுநல், ஆகிய நான்கு, எட்டுத்தொகையுள் ஐங், கலி, நற், அக, குறு, முதலியன.

**முதற்பொருள்**:- நிலம், பொழுது - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை. சிறுபொழுது, பெரும்பொழுதுகள்

**கருப்பொருள்**:- ஐந்து நிலப் பகுதிக்குண்டான இயற்கைப் பொருட்களையும், செயற்கைப் பொருட்களையும் கருப்பொருள் என்பர்.

ஐவகை நிலத்திற்கும் உரிய தெய்வம், உணவு, விலங்கு,
மரம், பறவை, பறை, தொழில், இசை, முதலியன.

உரிப்பொருள் :- உரிப்பொருள் என்பது திணைக்குரிய பாடுபொருளாகும். அது வகை, ஊடல், கூடல், முல்லை, பாலை, மடல், நெய்தல், பெருந்திணை முதலியன.

கைக்கிளை - ஒருதலைக்காமம்

பெருந்திணை - பொருந்தாக் காமம்

குறிஞ்சித்திணை - ஓர் ஆணும் பெண்ணும் கூடுகின்ற நிகழ்வு.

முல்லைத்திணை - காதலனை வேண்டி நினைத்தபடி இருக்கும் பெண்ணின் நிலையைப் பாடுவது.

பாலைத்திணை - காதலர்களின் பிரிவைப் பாடுவது.

மருதத் திணை - காதலர்களுக்கிடையே நிகழும் ஊடல் நிகழ்ச்சிகளைப் பாடுவது.

நெய்தல் - கடலுக்கு சென்ற கணவன் திரும்பி வரும் வரையில் ஏங்கி இருக்கும் நிலையைப் பாடுவது.

முல்லைப்பாட்டு : ஆசிரியப்பா அடிகளை உடையது 103 அடிகள் கொண்டது. ஆசிரியர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் நப்பூதனார்.

குறிஞ்சிப்பாட்டு : ஆசிரியர் கபிலர். 261 அடிகள். ஆரிய அரசன் பிரகத்தனைப் பற்றிப் பாடியது.

நெடுநல்வாடை : ஆசிரியர் நக்கீரர். 188 வரிகளைக் கொண்டது

பட்டினப்பாலை - காதலர் பிரிவைப் பாடும் பாலைத்திணை சார்ந்தது. ஆசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். 301 வரிகளை உடையது

ஐங்குறுநூறு - 3 முதல் 6 அடிகளைக் கொண்டது. ஐந்து திணைகளுக்கும் 500 பாடல்களைக் கொண்டது.

குறுந்தொகை. 4 முதல் 8 அடிகளைக் கொண்டது. மொத்தம் 400 பாடல்களைக் கொண்டது. பாடிய புலவர்கள் 203.

நற்றிணை 9 முதல் 12 அடிகளைக் கொண்டது. 400 பாடல்களைக் கொண்டது. 187 புலவர்கள் பாடியுள்ளனர்.

அகநானூறு 13 முதல் 31 அடிகளை உடையது. 400 பாடல்களைக் கொண்டது. 158 புலவர்கள் பாடியுள்ளனர். மேலும் பாடல்களைப் பகுப்பு களிற்றியானை நிரை, மணிமிடைப்பவளம்
நித்திலக்

கலித்தொகை :- 150 பாடல்களையுடையது. கலிப்பாவால் ஆனது, 5 புலவர்கள் பாடியுள்ளனர்.

## புற இலக்கியம்

18 நூல்களில் பத்துப்பாட்டுள் திரு, பொரு, சிறு, பெரும், கூத்தராற்றுப்படை, மதுரைக்காஞ்சி, ஆகிய 6-ம் எட்டுத்தொகையுள் புறம், பதி, ஆகிய இரண்டும். பரிபாடல் அகம் புறம் சார்ந்தது. புறம் 7 திணைகளாக வகுக்கப்பட்டுள்ளது. வெ, வஞ், உழி, தும், வாகை, காஞ், பாடாண் என்பன. வெட்சி ஆநிரை கவர்தல், வஞ்சி - பகை அரசனை மற்றோர் அரசன் எதிர் கொள்வது. உழிஞைத் திணை கோட்டையை முற்றுகையிடுதல், தும்பை போரிடும் நிகழ்ச்சியைப் பாடுவது, வாகை - வெற்றியைப் பாடுவது, காஞ்சி - நிலையாமை குறித்து பாடுவது.

<u>புறத்திணை இலக்கியங்கள்</u> :- திருமுருகாற்றுப்படை - ஆசிரியர் மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரர். 317 அடிகளை உடையது. பொருநராற்றுப்படை - பொருநன் ஒருவன் மற்றொரு பொருநனைச் சோழன் கரிகாலனிடம் ஆற்றுப்படுப்பது. 248 அடிகளையுடையது. ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார். சிறுபாணாற்றுப்படை - சிறிய யாழை மீட்டும் பாணர்கள். ஆசிரியர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார். நல்லியக்கோடனைப் புகழ்ந்து பாடுவது. பெரும்பாணாற்றுப்படை - பெரிய யாழை வைத்துப் பாடுபவர்கள். தொண்டைமான் இளந்திரையன் அரசனின் புகழ் பாடப்படுவது, 500 பாடல்கள், ஆசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். கூத்தராற்றுப்படை - கூத்தர் என்பதன் இப்பெயர் பெற்றது. நன்னன் மன்னனின் புகழ் பாடப்படுவது. ஆசிரியர் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார், 589 அடிகளைக் கொண்டது. மதுரைக்காஞ்சி - நீண்ட அடிகளை உடையது. 782 அடிகள், பாண்டியன் நெடுஞ்செழியனைப் புகழ்ந்து பாடுகிறது. ஆசிரியர் மாங்குடி மருதனார். புறநானூறு - பெரிய நூல் இது. 400 பாடல்களைக் கொண்டது. 157 புலவர்கள் பாடியுள்ளனர். பதிற்றுப்பத்து - சேர மன்னர்களைப் பாடுவது. பத்துப்பாடல்கள் வீதம் 100 பாடல்களைக் கொண்டது. முதல் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை. பரிபாடல் - இசைப்பாடல் வகையைச் சார்ந்தது. அகம் புறம் சார்ந்தது. மொத்தம் 70 பாடல்கள், கிடைத்துள்ளவை 22 பாடல்களே.

இத்தகைய தொல்காப்பியம் தமிழ் மொழியையும் தமிழ் மொழி வழியாக உருவாகிய இலக்கியத்தை ஆராய்ந்து இலக்கணங்களை உருவாக்கித் தந்துள்ளது. சங்க இலக்கியத்தில்

திணைமரபு பற்றிய செய்திகள், அகப்பாடல்களில் ஆண்மையப் பார்வை பற்றிய செய்திகள், பெண் மொழியைக் கட்டுப்படுத்துதல், பெண்ணுக்கான வெளிப் பகிர்வை, பற்றிய செய்திகள், கண்காணித்தல், திருமண வாழ்வு குறித்த செய்திகள். பெண் நுகர்வுப் பொருள், ஆண் குழந்தை - பெண் குழந்தைகள், அதிகார அரசு உருவாக்கம் - புலவர் அரசர் உறவுகள் - தாய் - சேய் உறவுகள், பெண்பாற் புலவர்கள், இப்படியான பல கவிதைகள் காட்சிகள் சங்க இலக்கியப் பாடல்களில் பொதிந்து கிடக்கின்றன.

## வினா வங்கி

### இரண்டு மதிப்பெண் வினா

1. சங்கத்தில் கிடைத்துள்ள பழமையான இலக்கியம்.?
2. பொருள் என்பது எதைக் குறிக்கிறது.?
3. களவுப் பொருள் என்றால் என்ன.?
4. திணை என்றால் என்ன.?
5. வகைத் திணையை விளக்குக?

### ஐந்து மதிப்பெண் வினா

6. பத்துப்பாட்டு நூல்கள் யாவை.?
7. பெரும்பொருள் குறித்து எழுதுக.?
8. உரிப்பொருள் எத்தனை? விளக்குக.?
9. பட்டினப்பாலை குறித்து எழுதுக.?
10. புறப்பாடல் திணைகளைப் பற்றிக் கூறு.?

### விரிவான விடை தருக

11. எட்டுத் தொகை நூல்கள் குறித்து விரிவாக எழுதுக.?
12. பத்துப்பாட்டில் புற இலக்கியங்கள் குறித்து எழுதுக.?
13. எட்டுத்தொகை நூல்களில் அக இலக்கியங்கள் பற்றி கூறுக.?

# அற இலக்கியம்

அற இலக்கியங்கள் திரு, நா, பழ, நான், ஆசா, முதுமொழி, திரி, சிறு, ஏலாதி, இன்னா, இனிய, என்பன.

**திருக்குறள்**. ஈரடிகளைக் கொண்ட வெண்பாவினால் ஆனது அறம், பொருள், இன்பம் என்ற பகுதியையுடையது. அறம்-38, பொருட்பால்-70, காமத்துப்பால் 25 அதிகாரங்களையும் உடையது. 133 அதிகாரங்கள் 1330 குறட்பாக்களைக் கொண்டது.

**நாலடியார்**. நான்கு அடிகள் கொண்ட வெண்பாவினால் ஆனது. 400 பாடல்களையுடையது, பாடியவர்கள் சமண முனிவர்கள் இதுவும் அறம் பொருள், இன்பம் என்ற மூன்று பிரிவுகளை உடையது, 40 அதிகாரங்களைக் கொண்டது, இதில் அறம்-13, 24 பொருட்பாலும், 3 அதிகாரம் காமத்துப்பாலும் அமைந்துள்ளது.

**பழமொழி நானூறு**. 400 வெண்பாக்களையுடையது. ஆசிரியர் முன்றுறை அரையனார். நீதிக் கருத்தை வலியுறுத்த பழமொழிகள் இடம்பெற்றிருக்கும். "ஞாயிற்றைக் கையால் மறைக்க முடியுமோ" என்பன போன்ற பழமொழிகள் இடம் பெற்றிருக்கும்.

**நான்மணிக்கடிகை**. 106 வெண்பாக்களைக் கொண்டது. ஆசிரியர் விளம்பிநாகனார். கடிகை போன்ற நான்கு கருத்துக்களால் ஆனது. உடம்புக்கு கண்ணை விட சிறந்த உறுப்பில்லை, பெற்ற தாயைவிட பெரிய கடவுள் இல்லை என்பன போன்ற செய்திகளை வலியுறுத்துவதாக அமைந்திருக்கும்.

**ஆசாரக்கோவை**. ஒழுக்கங்களின் தொகுதி என்ற பொருள் 100 பாடல்களைக் கொண்டது. வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களைப் பற்றிக் கூறுகிறது. ஆசிரியர் பெருவாயின் முள்ளியார்.

**முதுமொழிக்காஞ்சி** 100 பாடல்களால் ஆனது, ஆசிரியர் மதுரை கூடலூர் கிழார். பத்து தலைப்புகளில் பத்துப் பத்துப் பாடல்களைக் கொண்டது. மனிதர்கள் ஆசையால் அலைப்புண்டு துன்பத்தில் மூழ்குகிறார்கள் என்பதைப் பற்றி பேசுகிறது.

**திரிகடுகம்** 100-பாடல் கொண்டது, மூன்று கருத்துக்கள் இடம் பெற்றிருக்கும். சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மருந்தைப் போன்று பாடல்தோறும் மூன்று கருத்துக்கள் இடம் பெற்றிருக்கும்.

சிறுபஞ்சமூலம். 97 பாடல்களைக் கொண்டது. ஆசிரியர் காரியாசான். ஐந்து வேர்களைப் பொருட்களைப் போல, பாடலின் வரும் ஐந்து கருத்துக்கள் மனநோய்க்கு மருந்தாகப் பயன்படுகிறது.

ஏலாதி - 80 பாடல்களைக் கொண்டது. ஆசிரியர் கணிமேதாவியார். ஆறு மேலைப் பொருட்களைக் கொண்டது ஏலாதி. இந்த மருந்துபோல பாடல் வரும் ஆறு கருத்துக்களும் மனிதர்களின் வாழ்விற்கு மருந்தாகப் பயன்படுகிறது.

இன்னா நாற்பது - 40 பாடல்களையுடையது. ஆசிரியர் கபிலர் - இது மனிதர்களுக்கு இன்னாதவை என்று சொல்கிற 164 கருத்துக்களை பதிவு செய்துள்ளது.

இனியவை நாற்பது. ஆசிரியர் பூதஞ்சேந்தனார். இனியவை என்று தான் உணர்ந்த கருத்துக்களை 40 வெண்பாக்களில் பாடியுள்ளார். 127 இனிய கருத்துக்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

காதல் பாடல்கள் - பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் கார் நாற்பது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுபது, ஐந்திணை ஐம்பது, கைந்நிலை என்ற ஆறு நூல்கள்.

கார் நாற்பது. ஆசிரியர் கண்ணங்கூத்தனார். கார்காலம் என்பது மழைக்காலம். கார் காலத்தில் வருவேன் என்று பிரிந்து சென்ற, தலைவன் இன்னும் வரவில்லை. கார்காலம் வந்துவிட்டதே தோழி தலைவனின் வரவை அறிவிக்கிறாள்.

திணைமொழி ஐம்பது. திணைக்கு பத்துப் பாடல் என்ற முறையில் 50 பாடல்கள் இதில் இடம் பெற்றுள்ளன. ஆசிரியர் கண்ணன் சேந்தனார். தலைவன் தலைவி குறிப்புக் காட்சிகள் பாடப்பட்டுள்ளன.

திணைமாலை நூற்றைம்பது. ஆசிரியர் கணிமேதாவியார் 154 பாடல் கொண்டது. உள் போக்கு பற்றி பேசப்படுகிறது

ஐந்திணை எழுபது. திணைக்குப் 14 பாடல்கள் என்ற முறையில் 70 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. 66 பாடல்கள் கிடைத்துள்ளன.

**ஐந்திணை ஐம்பது**. திணைக்குப் பத்துப் பாடல்களைக் கொண்டது. ஆசிரியர் மாறன் பொறையனார். அகம்-என்ற காதல் வாழ்க்கை மக்களின் வாழ்வில் நடப்பது போன்று மிக அழகாக எடுத்துரைக்கின்றார்.

**கைந்நிலை**. ஆசிரியர் புல்லங்காடனார். திணைக்கு 12 பாடல் என்ற முறையில் மொத்தம் 60 பாடல்களைக் கொண்டு உள்ளது. சில சிதைவுற்று இருக்கும்.

**களவழி நாற்பது**. 40 பாடல்களைக் கொண்டது களவழி நாற்பது போர்க்களத்தைக் குறிக்கும். அதனால் இப்பெயர் பெற்றது.

**பிற நூல்கள்**. தகடூர் யாத்திரை. முத்தொள்ளாயிரம்.

**பிற அற இலக்கியங்கள்**

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, நீதிநெறி விளக்கம், வெற்றிவேற்கை, நன்னெறி, அருங்கலச்செப்பு, போன்றவை. அறநெறிச்சாரம், உலகநீதி,

அற இலக்கியங்களில் அதிகாரம்-அரசு-அறம், அற இலக்கியமும் சாதியமும், அற இலக்கியங்களில் பெண்கள், அற இலக்கிய போன்ற நிகழ்வுகளும் நடந்தேறின என்பதை அற இலக்கியங்கள் வாயிலாக உணர முடிகிறது.

## வினா வங்கி

### இரண்டு மதிப்பெண் வினா

1. கீழ்க்கணக்கு என்றால் என்ன?
2. பொருட்பால் எத்தனை அதிகாரங்களை உடையது?
3. சிறுபஞ்சமூலம் எத்தனை வெண்பாக்களை உடையது?
4. இன்னா நாற்பது எத்தனை அறக்கருத்துக்களைப் பற்றி எடுத்துரைக்கிறது.
5. பிற்கால அற இலக்கியங்கள் சிலவற்றைக் குறிப்பிடு.?

### ஐந்து மதிப்பெண் வினா

6. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை எழுது.?
7. பதினெண் மேல்கணக்கு நூல்களை விவரி.?
8. திரிகடுகம் - குறிப்பு வரைக.?
9. ஐந்திணை எழுபது குறித்து எழுதுக.?

### பத்து மதிப்பெண் வினா

10. நீதி நூல்கள் குறித்து விவரி.?
11. பழமொழி நானூறு, முதுமொழிக்காஞ்சி குறித்து எழுதுக.?
12. பிற்கால அற இலக்கியங்கள் குறித்து விவரி.?